# அஞ்சனை மைந்தனின்

# அருட்பா மணிமாலை

பரிதிமதி

## கடவுள் வாழ்த்து

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்று ஆறாக ஆரியர்க் கேகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கையைக் கண்டயலாரூரில்
அஞ்சிலே ஒன்று வைத்தான் அவன்நம்மையளித்துக் காப்பான்.

ஓம் ஹரி மர்க்கட மர்க்கடாய ஸ்வாஹா
ஓம் நமோ பஹவதே வீராஞ்சனேய மஹாபலாய ஸ்வாஹா.
ஆபதாம் அபஹர்த்தாராம் தாதாராம் ஸர்வ ஸம்பதாம்
லோகாபிராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம்யஹம்.
கோஷ்பதீ க்ருத வாராஸிம் மஸகீக்ருத ராக்ஷஸம்
ராமாயண மஹாமாலாரத்னம் வந்தே அனிலாத்மஜம்.

அஞ்சனா நந்தனம் வீரம் ஜானகீ ஸோக நாசனம்
கபீஸமக்ஷ ஹந்தாரம் வந்தேலங்கா பயங்கரம்
ஆமிஷீக்ருத மார்த்தாண்டம் கோஷ்பதீக்ருத ஸாகரம்
த்ருணீக்ருத தஸக்ரீவம் ஆஞ்சனேயம் நமாம் யஹம்

மனோஜவம் மாருத துல்யவேகம் ஜிதேந்திரியம் புத்திமதாம் வரிஷ்டம்
வாதாத்மஜம் வானரயூத முக்யம் ஸ்ரீராமதூதம் ஸிரஸா நமாமி.
உல்லங்க்ய ஸிந்தோஸலீலம் ஸலீலம் ய:ஃஸோஹ வஹ்நிம் ஜனகாத்மஜாய
ஆதாய தேனைவ ததாஹ லங்காம் நமாமிதம், ப்ராஞ்ஜலி ராஞ்ஜனேயம்.

ஆஞ்ஜனேய பரிபாடலாலனம் காஞ்சனாத்ரி கமனீய விக்ரஹம்
பாரிஜாத தருமூல வாஸினம் பாவயாமி பவமான நந்தனம்
யத்ர யத்ர ரகுநாத கீர்த்தனம் தத்ர தத்ர க்ருத மஸ்த காஞ்ஜலிம்
பாஷ்பவாரி பரிபூர்ண லோசநம் மாருதிம் நமத ராக்ஷஸாந்தகம்.

புத்திர்பலம் யஸோதைர்யம் நிர்ப்பயத்வம் அரோகதா
அஜாட்யம் வாக்படுத்வம்ச ஹனூமத் ஸ்மந்நாத் பவேத்
வீதாகிலே விஷயேச்சம் ஜாதானந்தா ஸ்ருபுளக மத்யச்சம்
ஸீதாபதி தூதாத்யம் வாதாத்மஜம் அத்ய பாவயே ஹ்ருத்யம்.

தருணாருண முககமலம் கருணார பூஸரபூரிதாபாங்கம்
ஸஞ்ஜீவன மாஷாஸே மஞ்ஜுள மஹிமானம் அஞ்ஜனாபாக்யம்.
ஸம்பரவைரி ஸராதிகம் அம்புஜதள விபுலலோசனாதாரம்
கம்புகல மனிலதிஷ்டம் பிம்பிஜ்வ லிதோஷ்டம் ஏகம் அவலம்பே

தூரிக்ருத ஸீதார்த்தி ப்ரகடீக்ருத் ராமவைபவ ஸ்பூர்த்தி
ராமவைபவ ஸ்பூர்த்தி தாரித தஸமுக கீர்த்தி
புரதோ மமபாது ஹனுமதோ மூர்த்தி
வானர நிகராத்யக்ஷம் தானவ குலகுமுத ரவிகரஸத்ருஷம்
தீனஜனாவனதீக்ஷம் பவனதப: பாகபுஞ்ஜம் அத்ராக்ஷம்
ஏதத் பவனஸுதஸ்ய ஸ்தோத்ரம் ய:படதி பஞ்சரத்னாக்ளம்
சிரமிஹ நிகிலான் போகான் புக்த்வா ஸ்ரீராமபக்தி

மாருதிராஜா பலபீமா பஜனாலோகே தே ப்ரேம
அஞ்சனாபுத்ரா பலபீமா பஜனாலோகே தே ப்ரேம
வாயுகுமாரா பலபீமா பஜனாலோகே தே ப்ரேம
ராமதூதா பலபீமா பஜனாலோகே தே ப்ரேம
ஆஞ்சநேயா பலபீமா பஜனாலோகே தே ப்ரேம
ஜெய் ஸ்ரீஆஞ்சநேய ஸவாமி கே ஜெய்

ஹனுமான் அஞ்ஜனாஸூனு: வாயுபுத்ரோ மஹாபல:
ராமேஷ்ட: பல்குனஸக : பிங்காக்ஷ: அமிதவிக்ரம:
உத்திக் ரமணஸ்சைவ ஸீதாஸோக விநாஸக்ருத்
லக்ஷ்மணப்ராண தாதாச தஸக்ரீவஸ்ய தர்ப்பஹா
த்வாத ஸைதானி நாமானி கபீந்த்ரஸ்ய மஹாத்மன:
ஸ்வாபகாலே ஜபேந் நித்யம் யாத்ரகாலே விசேஷத:
தஸ்யம்ருத்யு பயம் நாஸ்தி ஸர்வஸ்த்ர விஜயீபவேத்.

வந்தேஸந்தம் ஸ்ரீஹனுமந்தம் ராமதாஸம் அமலம் பலவந்தம்
ப்ரேமருத்தகளம் அஸ்ருவஹந்தம் புளகாங்கித வபுஷாவிலஸந்தம்
ராமகதாமர மதூனி பிபந்தம் பரமப்ரேம பரேண நடந்தம்
ஸர்வம் ராமமயம் பஸ்யந்தம் ராம ராமேதி ஸதாஜபந்தம்
ஸத்பக்திபதம் ஸமுபதி ஸந்தம் விட்டலபந்தம் ரதிஸூகயந்தம்
வந்தேஸந்தம் ஸ்ரீஹனுமந்தம் ராமதாஸ மமலம் பலவந்தம்
ஜெய் ஸ்ரீஆஞ்ஜனேய ஸ்வாமிகே ஜெய்.

அஸாத்யம் ஸாதஹ ஸ்வாமின் அஸாத்யம் தவகிம்வித:
ராமதூதா க்ருபாஸிந்தோ த்வத்ப்ரஸாதாத் பத்ரமஸ்துந:
உத்யதாதித்ய ஸங்காஸம் உதாரபுஜ விக்ரமம்
கந்தர்ப்ப கோடி லாவண்யம் ஸர்வவித்யா விஸாரதம்
ஸ்ரீராமஹ்ருதயா நந்தம் பக்தகல்ப மஹீருஹம்
அபயம் வரதம் கோர்ப்யாம் கலயே மாருதாத்மஜம்
அஞ்ஜனா கர்ப்பஸம்பூத கபீந்த்ர ஸசிவோத்தம
ராமப்ரிய நமஸ்துப்யம் ஹனுமந்த்ரக்ஷ ஸரவத
அகால ம்ருத்யுஹரணம் ஸர்வ வ்யாதிநிவாரணம்
ஸமஸ்த பாபஸமநம் ஹநுமத் பாதோதகம் ஸூபம்.
ஸூந்தரவில்லியேவ சூழ்கடல் இலங்கைமேவ
அந்தமில் வீடுநல்கும் ஆயிழைதன்னைக் கண்டு
வந்தவெவ்வரக்கர் சிந்தி வளையெரியெடுத்து மீண்ட
நந்தலில்லாத தூதன் நம்மையும் அளித்துக்காப்பான்.
மீட்டுமுரை வேண்டுவன வில்லையென மெய்ப்போர்
தீட்டியது தீட்டரிய செய்கையது செவ்வே
நீட்டிகென நேர்ந்தன னெனாநெடிய கையால்
காட்டினான் ஓர்ஆழியத வாணுதலி கண்டால்.

ஓம் வாயுபுத்ராய வித்மஹே ஞானஹஸ்தாய தீமஹே
தன்னோ வேதி ப்ரசோதயாத்.
ஓம்ஹரி மர்க்கட மர்க்கடாய ஸ்வாஹா ஓம்நமோபகவதே
வீராஞ்சனாய மஹாபலாய ஸ்வாஹா.

ஆஞ்ஜநேயனை நாமெல்லாம் நன்றாக அறிவோம். விநாயகரையும், அனுமனையும் சனி பகவானே வணங்கி மதிப்பதால், இவர்களின் அடியவர்களுக்கு அருள்அதிகம் செய்கிறார். பணிவென்றால் ஆஞ்ஜநேயனே, பக்தியென்றால் அவனே இலக்கணம் என்று திரு இராமபிரானே எத்துணைமுறை இயம்பியிருக்கிறார். சொல்லின் செல்வனாம் அனுமனை, காசித்திருத்தலத்தில் துளசிதாஸமுனிவர் அனுமனின் நாற்பது பாக்கள் (அனுமன் சாலீஸா) என்ற காவியத்தால் புகழ்ந்து அஞ்சலி செய்திருக்கிறார். அந்தக் காவியத்தை தீந்தமிழில் நான் பாமாலையாக எழுதி, அந்த காற்றின் மைந்தனின் அருளைப் பெறலாம் என்று இந்த சிறுமுயற்சியை முனைகிறேன். என் நாவில் அந்த சஞ்சீவி நின்று இந்தப் பாக்களின் மூலமாக அருளுவான் என்ற நம்பிக்கையுடன் இந்தப் பாக்களை எழுதுகிறேன். அனுமனே வணக்கம், வீமனின் சோதரனே வணக்கம். சோர்வுற்ற மனத்தின் தொய்வினைப் போக்குவாய் வாயுகுமாரா என்று வணங்கி, கணநாதனையும் வணங்கி, கடவுள் வாழத்துடன் தொடங்குகிறேன்.

பரிதிமதி

## கடவுள் வணக்கம்

1. குருவின் பாதார விந்தமடையும் பெரியவனே
மருவில்லா மலர்சுகந்த மணமுடைய மனத்தினனே
விமல மனமுடை ரகுவரனைச் சரணமடைந்தவா
பலமான மெய்யுடைய வானரவேந்தனே வணக்கம்.

2. அறிவில்லாத மனத்தினுக்கு அறிவைத் தருவாயே
செறிவுற்று அறிவுநிறை வாயுமைந்தா வருவாயே
வீரம் கலைகளுக் கரசனே நீயருள்வாய்
தீரமாய் விளங்கி கிலேசமற்று நீதாங்கிடுவாய்.

3. அனுமனின் நாற்பதே ஆண்டவனின் நாற்பது
அனுமனே சிவனாரின் மறுஉருவ மானதினால்
அனுமனின் நாற்பதைத் தினமும் செப்பிடுவாய்
அனுமனின் வலிமையை நீயே பெற்றிடுவாய்.

## அனுமனின் நாற்பது

1. வெற்றி வீரனே அருட் குணக்கடலே
செயமருளும் தலைவனே செகத்தினைக் காப்பவனே

2. ராமனின் தூதனாம் சக்தி மிகுந்தவனே
அஞ்சனையின் மகனே மலைகளில் எதிரொலிப்பவனே

3. மனபலம் மிகுந்தவனே வெற்றியுடை புயமிகுந்தவனே
வருத்தம் நீக்குபவா நன்மதியுடைய வேந்தனே

4. பொன்னாபரணம் அணியும் மார்புடையவனே
செவியில் குண்டலமும் சுருள்முடியும் உடையவனே

5. கரத்தினில் கதையும் தோள்களின் வலிவும்
முகத்தினில் ஒளியும் விளங்கும் வாயுகுமாரா

6. ஆதிசங்கரனின் ஒளியே கேசரியின் புதல்வா
சோதிப்புகழுடையவா செகத்தினை அணைப்பவனே

7. புத்தியில் பெரியவனே குணசாதுர்ய முடையவனே
சித்தியில் இராமனை வைத்து ஆதரிப்பவனே

8. தாசரதியின் புகழை விரும்பிக் கேட்பவனே
இராமன் இலக்குவன் மைதிலியைப் பணிபவனே

9. சூக்கும ரூபத்தில் விளங்கும் பேரழகா
விகடரூபம் தரித்து இலங்கையை யடைந்தவா

10. சோதரன் வீமன் உருவில் அசுரர்களை யழித்தவா
மேதிடும் இராமசந்திரனின் சரண மடைந்தவனே

11. மனதில் லயிக்கும் சஜீவனெனும் அரசே
ரகுவீரனாம் ராம் ராம் நாமம் செபிப்பவனே

12. இரகுகுலத் தரசனின் அன்பான சோதரனே
அவனின் அன்பரசன் பரதனுக் கீடானவனே

13. என்றும் உனைப் பணிந்தால் பேரின்பம் கிட்டும்
திருமகள் மார்பில் உறையும் இராமனைப் பணிந்தவா

14. சனக முதலான பிரம்மமுனி சிரேட்டர்
நாரதர் வேதியர் போற்றும் குணபாலனே

15. குபேரர் வருணன் திக்பால வேந்தர்கள்
கபிகோபிதம் கானமியற்றி வணங்குவர்

16. நீயுன் உதவியை சுக்கிரீவனுக்குத் தந்தாய்
ஸ்ரீராமனை அடைந்ததால் வேந்தனா யானான்

17. உன்னைப் போற்றினான் வீடணன் வேந்தன்
சென்னியில் பெற்றான் இலங்கை மகுடமே

18. அனுமனாய் நீயே பரிதியுடன் பொருதாய்
அனுமனாய் நீயே லீலைகள் பலசெய்தாய்

19. தலைவனாம் இராமனின் கணையாழியை ஏந்தி
மலைகளைத் தாண்டி இலங்கையை மேவினாய்

20. உன்னுடைய சக்தி உலகுக்கே விந்தை
உன்னுடைய ஆசிகளை ஏற்பர் யாவருமே

21. இராமனே பெரியவர் உன்னைப் புகழ்ந்தவர்
இராமனின் ஆணையை சிரத்தில் தாங்குபவா

22. யாவரின் நன்மைகளையும் நீ விரும்புவாய்
யாவரும் அஞ்சாமல் அவர்களைக் காத்திடுவாய்

23. தீயவர்கள் யாவரையும் நீ அழித்திடுவாய்
வலுவில்லா மாந்தர்க்கு நீ காப்பளிப்பாய்

24. பேரரக்கர் யாவரும் வலுவிழந்தார் உன்னிடம்
பேரான வீரனாம் உன்நாமம் கேட்டாலே

25. பிணிகள் அழித்திடுவாய் நன்மையைத் தருவாய்
மணியாம் உனது வீரப்பெயர் செபித்தால்

26. சங்கடங்கள் தீர்த்திடுவாய் அனுமன் வீரா
மனதில் தியானத்துடன் உனையே துதித்தால்

27. எப்பொழுதும் இராம நாமமே செபிப்பாய்
அனுதினமும் நீயே தவத்தின் அரசா

28. மனதின் ஆசைகள் பூரணமாய்க் கிட்டும்
குவலயம் அமுதமாய்ச் சீவனைக் காத்திடும்

29. அண்டமாயிரத்திலும் உன் புகழ் நாமம்
மண்டி விளங்கிடும் வெற்றி வீரனே

30. முனிவர்கள் பெரியவர் உன்னைப் பூசிப்பார்
அசுரர்களை அழித்த இராமனின் பக்தனே

31. அட்டமா சித்திகளுக்கும் நவநிதிக்கும் அரசனே
அன்னை சானகியைச் சீராய்ப் பணிந்தவா

32. இராம நாமமே உன்னுடைய மொழியாகும்
இராம வேந்தனுக்கு தாசனான மாருதிக்கே

33. உன்னுடைய வேள்வியே இராமனின் துதியே
மன்னிடும் சென்மங்களின் விசனம் தீர்த்திடவே

34. வாழ்க்கையின் முடிவில் இரகுவரனை வேண்டியே
மறுபிறவியிலும் ஹரி பக்தனாகப் பிறந்திடவே

35. வேறுகடவுளர் அருள் தேவை இல்லையாம்
அனுமனாம் கடவுளே ஆனந்த மளிப்பவர்

36. துக்கமெல்லாம் கண்டிப்பாய் நீக்கிடுவாய் நீயே
பக்கத்தில் நின்றிடுவாய் ஆற்றல் தந்திடுவாய்

37. வெற்றியே தந்திடுவாய் அனுமனை யடைந்தால்
பற்றியே காப்பளிப்பாய் குருவாய்க் காத்திடுவாய்

38. யாரும் உனதுநாமத்தை நூறுமுறை செபித்தால்
பாரும் போற்றும் பலனைத் தந்திடுவாய்

39. இந்த அனுமனின் நாற்பதைக் கூறியேவாழ்வீர்
சொந்தசீவனில் எப்போதும் மேன்மையை யடைவீர்

40. துளசிதாசரின் மனதில் சகலநன்மை யளித்தவனே
துளசியினால் அர்ச்சிப்பேன் பூரணஆசி நீயேதந்திடுவாய்.

**அஞ்சலி**

1. வாயுவின் புத்திரனே மங்கல மூர்த்தியே
இராமன் இலக்குவன் மைதிலி எல்லோருடனே
எப்பொழுதும் இதயக் கமலத்தில் பூசித்து
வாழ்வாங்கு வாழ்ந்திட்ட மாருதியே இரக்ஷிப்பாய்.

2. மங்கலம் அளித்திடுவாய் என்னுடைய மனைவிளங்க
உன்கரம் பிடித்திட்டேன் தஞ்சம டைந்திட்டேன்
ஆசியளித் திடுவாய் சிரஞ்சீவிக் கடவுளே
பேசும் நாவினில் சொல்லின் செல்வனாயாக்கிடுவாய்

3. மாலவனுக்கு சேவை செய்ய விரும்பி
அரனார் எடுத்த கோலமே அஞ்சனைபுத்திரன்
அனுமனின் வணக்கம் அரனின் வணக்கம்
ஆஞ்சனேயா சரணம் செயமாருதியே சரணம்.

4. இதுவரை ஆசனத்தில் அமர்ந்ததில்லை நீயே
இதுபோதும் எனநீயே மண்டி யிட்டமர்வாய்
சதமெனவே ஸ்ரீராமன் சரணமே கதியென்றாய்
இதயக் கமலத்தில் அவனையே நீவைத்திருந்தாய்

5. சேவை செய்யவிரும்புவர் மன்பதையில் குறைவே
சேவை செய்யவேண்டுமெனில் நீயே தானளவாம்
சேவையே எப்பொழுதும் எனஇளவலாய்ப் பகர்ந்தாய்
சேவை தனைஉன்னிடமே சாதனையாய்க் கண்டார்

6. இரகு குலத்தில் பிறந்தவனே திருராமமூர்த்தியாம்
இரகு குலத்தை நினைத்தாலே பரிதிக்குப் பணிவாம்
பரிதியிடம் இளவயதில் நீபொரு திட்டதாலே
இரகுகுலத்தில் இராமனுக்கு சேவைகளைச் செய்தாய்.

7. நீயாக நான்என்றும் முயர்ந்திடவே ஐயா
நீயேதான் என்னையே ஆசித் திடுவாயே
நீயேதனி ஒருவனாய் மூலிகை மலையதனை
போர்க்கலத்தில் தந்தாய் விண்ணோர் வியந்திடவே.

8. ராம்என்று செபித்து நீயிட்ட மலைத்துண்டுகளே
ராம்ராம் என்றேஒலி செய்து மிதந்தனவாம்
இராமனே தானெடுத்து வீசிய பாறைகளெல்லாம்
அமிழ்ந்தனவே உலகுக்கு உன்பக்திதனைக் காட்டிடவே.

9. லவகுசனைப் பொருதிட்ட செய மாருதியே
லவகுசனும் சளைக்கவில்லை உன்னிடமே சமரில்
அவரிடமே நீகண்டாய் திருராமனெனும் உணர்வை
ஓடியே சென்றுநீ அவரிடமே அறிவித்தாய்

10. நிலமகளைத் தலைமகளாய் நீகொண்டு விட்டாய்
நிலமகளை அஞ்சனையின் உருவத்தில் கண்டாய்
சடுதியிலே நீவந்து பரதனையே காத்தாய்
சடுதியிலே இலங்கைதனை வாலினால் அழித்தாய்.

11. பணிவான பக்தனே ஆஞ்சநேய மூர்த்தியே
பணிந்தேன் நானே தாணுமாலயன் தலத்தில்
தாராபுரி ஆஞ்சநேயா நாமக்கல் ஆஞ்சநேயா
நங்கநல்லூர் ஆஞ்சநேயா வணக்கம் வணக்கம்.

12. அனந்தமங்கலத்தில் தசபுஜ ஆஞ்சநேயனே
புதுகைபுரி ஸ்கந்தபுரி பஞ்சமுக ஆஞ்சநேயனே
அசோகை வனமதனை அழித்திட்ட ஆஞ்சநேயனே
தாள்பணிந்தேன் அய்யனே நற்கதியை அளித்திடடா.

13. ஓம் செய ஓம் செய மாருதியே தேவா
ஓம் செய ஓம் செய ஞானகுமாரா தேவா
ஓம் செய ஓம் செய சிறுதிருவடியே தேவா
ஓம் செய ஓம் செய இராமபக்தனே தேவா.

14. மன்னுபுகழ் அஞ்சனையின் மணிவயிறு உதித்தவனே
மன்பதையில் புகழ்பெற்ற கேசரியின் புதல்வனே
செண்டெனவே பரிதியையே கையில டைந்தவனே
வாயுவின் புத்திரனே வானவர்க் கரசனே.

15. இந்திரபுரியெனவே விளங்கிடும் சுசீந்தரமாம்
சந்திரன் முதலான நவவானோர் விண்ணிடமே
ஆத்தும சோதி அமைதியாக தியானத்திலே
விசுவரூபமாய் நின்றிட்டான் பக்தா ஞ்சனனே.

16. சங்கட மோட்சம் தந்திடுவான் அனுமந்தனே
தங்கிடும் வினையெல்லாம் களைந்திடுவான்
காசிபுரியில் அவனை இலங்கையில் பார்த்திடுவீர்
மாசில்லா மனத்துடன் சன்னதியில் நின்றிடுவீர்.

17. குறையில்லா வாழ்வுதனைத் தந்திடுவான் அவனே
மறைமுனிகள் வணங்கிடுவார் அனுதினமும் உனையே
விண்ணைத் தொடவிசுவரூபமாய் அவன் நின்றான்
எண்ணத்தின் வேகத்தில் இலங்கையை யடைந்திட்டான்.

18. சிறிய வானரமே எங்கேகினாய் என்றஅரக்கி
மறுத்தெழுந்து அனுமனை விலக்கிட்டாள் செறுத்தி
உந்தித் தள்ளினான்மாருதி இராமனின் தூதனாய்
திருராமன் அலுவலை யாரே நிறுத்தலாகுமே.

19. மனத்தில் ஒரே இலக்கு அனுமனுக்கே
மடந்தை சீதையன்னையைக் காண்பதுவே
இலங்கை முழுவதுமே சுற்றிய லைந்தனன்
கலங்காத சித்தத்துடன் தேடினன் சானகியை.

20. எங்கெங்கு நோக்கிடினும் செல்வமாளிகைகள்
அங்கிருக்கும் அந்தப்புரத்திலும் கேளிக்கைகள்
செல்வனுக்கு எண்ணம் சானகி அன்னையே
நல்லணங்கு எனவே இராமநாமம் செப்புவதாகவே.

21. பிறிதொரு அரண்மனையில் நுங்கி நோக்கினான்
அரிநாமம் கேட்டதுவே விந்தை கொண்டான்
தியானத்தில் நோக்கினான் வீடண னசரனை
செயலிழந்து தனை மறந்தான் வாயுபுத்திரன்.

22. அதைவிட்டு இன்னொரு மனை புகுந்தான்
செவியதனில் பெரியதொரு ஒலி யுணர்ந்தான்
மலையெனவே அயர்ந்திருந்தான் கும்ப கர்ணன்
அரையாண்டு உறக்கமாம் பிறகே வயிற்றுணவாம்.

23. மாருதியின் கவனமெல்லாம் சானகியன்னை நினைவே
மாருதியின் செவியிலே ஆரவார ஒலிகளாம்
இலங்கேசன் மைந்தனாம் இந்திரசித்து வருகை
இலங்கைபுரி இளவல் நகர் உலாஒலிகளாம்.

24. இத்துணை சுந்தரமா இலங்காபுரி நகரம்
அத்துணை இறும்பூது அனுமன் மனதிலே
அப்பொழுது அவனின் மனதுஎண்ண மெல்லாம்
எப்பொழுது நான்காண்பேன் அன்னை சானகியை.

25. தொலைவிலே அவன் கண்டான் அரக்கர் ஆரவாரம்
சிலையென நின்றிட்டான் கருணை அனுமனே
இலங்கேசன் வந்திருந்தான் பரிவாரம் உடனேயே
இரதகஜபுரி ஆதியாம் மக்க ளுடனே.

26. வானர மானதினால் யாருமே நோக்கவில்லை
வானமென உயர்ந்திருந்த மாளிகைகள் நடுவே
ஆனாலும் இலங்கேசன் சிந்தித்து இருந்தான்
வானரமொன்று பட்டிணத்தில் வந்ததே யென்று.

27. சேனையென ஊர்வலம் சென்றிற்ற மாந்தர்
வனமாகிய அசோக மரங்கள் நிறையுமிடத்தில்
சென்றிற்றார் தங்களரசன் இராவண னுடனே
சிந்தைக் குள்ளானான் அனுமனாம் வானரமே.

28. திருராமா திருராமா என்றுமனத்தின் ஒலியே
திருஅனுமன் செவியிலே ஒலித்ததாம் அங்கே
அசோகவன மெங்கும் இராமநாமம் ஒலிக்கவே
சோகமான வடிவிலே அவன்கண்டான் பூமகளை.

29. திரிசடையென நல்லாள் அரக்கரின் குழுவிலே
திரிந்து பிறந்தவளாம் அரக்க குணமில்லாமல்
பெரியதந்தை ராவணரே சீதையைக் கடிந்ததை
பெரிதனவே கொள்ளாதே என்றே கூறியிருந்தாள்.

30. என்னுடைய தலைவனே திருராமனல்லாமல்
என்னுடைய சிந்தையிலே யாருக்கு மிடமில்லை
என்றே பகர்ந்திருப்பாள் எங்களன்னை சீதையே
பேரரசன் இலங்கைபதியை புல்லெனவே நிந்தித்தாள்.

31. இலங்கை வேந்தனுக்கு எப்பொழுதோ யாரிட்டசாபம்
சலங்கையொலி மாந்தரை விருப்பின்றி கைதொழின்
விலங்குத் தளையோடும் சிரம்பிளக்கு மாதலால்
இலங்கைபுரி பேரரசன் சானகியைத் தொடாஅநின்றான்.

32. எத்துணைமுறை அன்னை சானகியிடம் விரும்பிவந்தான்
பிறன்மனை நோக்கல் மேதினியில் பெரும்பிழையாம்
புவிமகள் கற்புக் கணிகலன் ஆனவளாம்
செவிமடுக்க வில்லைசிரம் அரசனிடம் நிமிர்ந்ததில்லை.

33. பேரரசன் இடம்பெயர்ந்து அரண்மனைக் கேகினான்
தாசரதி பதிதன்னை நினைந்துருகி இருந்தவள்
திருராமநாமம் செபமாகி வரும் ஒலியை
சன்னமாக செவியுற்றாள் இருளசோக வனத்தில்.

34. உற்றிற்று நோக்கினாள் இருமருங்கும் கூர்ந்திட்டாள்
சட்டெனவே கண்டுவிட்டாள் வானரமாம் அனுமனை
கண்ணிலே ஒருதீர்க்கம் உடலினிலே ஒருதயக்கம்
கூப்பிநிற்கும் கரமெங்கும் திருராமன் கடமைகளாம்.

35. அருணன் சாகரத்தில் முழுகிவிட்டா னென்று
தருணம் பார்த்து நின்றுவந்திட்டான் இருளரசன்
ஆழியைத்தாண்டி வந்த அன்புள்ளம் அனுமனே
நாழிகையை எண்ணியிருந்தான் அன்னையை யணுகவே.

36. தந்திரங்கள் மந்திரங்கள் வேடங்கள் எத்துணை
அந்திரமாம் ஆசையினைத் தூண்டிடவே முயன்ற
இந்திரசித்தன் தந்தை இராவணனே இருப்பான்
என்றனவே எண்ணினாள் இம்முறையும் அன்னையே.

37. அவளுக்கு மனஉளைச்சல் ஆயிரம்முறை எண்ணினாள்
சிவபக்தன் இராவணன் இராமநாமம் இயம்பிடான்
இராமநாமம் உரைப்பவர் தவறுகள் இழைத்திடார்
என்றெண்ணம் மேலிட அனுமனையே நோக்கினாள்.

38. சுந்தரமாம் வானரமே யாரப்பா இருளினிலே
அந்தரத்தில் மரத்தினிலே இராமநாமம் செப்புவையே
பேரரசன் திருராமனை அறிவாயா சுந்தரனே
வீரனா யிருப்பதால் இலங்கைவரை வந்தனையோ.

39. அன்னையே உன்னையே உண்ணிவந்தேன் இந்நாளில்
மன்னுபுகழ் திருராமன் பெருமைகளை நானறிவேன்
வானரர் அரசன் சுக்கிரீவன் எடுத்தியம்பி
தாசரதி ஆசியுடன் தேடினேன் தங்களையே.

40. இத்துணை நாட்களும் ஏமாற்று வித்தைகளை
மெத்தனவே செய்திட்டு வந்தான் இராவணனே
உத்தமமாய் காண்கிறாய் நியுன்னை நம்பிடவே
சட்டெனவே இயம்பிடுவாய் சாட்சிதனைக் காட்டிடுவாய்.

41. நானே இயம்பிடுவேன் எனக்கறிந்த கூற்றுகளை
நானே வியந்திட்டேன் திருராமன் சுயம்வரமதனை
எடுத்தது நோக்கினர் இற்றது கேட்டனர்
எடுத்தி யம்பினான் சிவதனுசை முறித்ததனை.

42. மணமுடித்து மிதிலையிலே என்தலைவன் உங்களுடன்
தனித்திருந்து அளவளாவி மனமகிழ்ந்த போதினிலே
கருங்காகம் வடிவினிலே நோக்கிட்டான் சயந்தனே
வெறும்புல்லை எடுத்தெறிந்தான் கண்ணினைக் கொய்தானே.

43. விசுவமுனி தன்னுடனே இளவலையும் இராமனையும்
தவசியாக தசரதனின் நகரிலிருந்து தந்தனரே
அண்ணனும் நோக்கினார் அவளும் நோக்கினாள்
எண்ணி மிதிலையிலே நடந்ததை இயம்பினானே.

44. கௌசிகன் யாகம் நடத்தவேண்டி காட்டுக்கேகினர்
கௌசல்யா அன்னை இராமபிரான் இலக்குவனார்
அரக்கர்கள் வான்வெளியில் சங்கடம் மேவினர்
முனிசிரேட்டர் சீராக அவிசதனை தேவர்க்கீந்தாரே.

45. திருராமன் திருவடிகளை நாம் பற்றவேண்டும்
அதற்கொரு நிரூபணம் அகலிகையின் கதையே
தாசரதி திருவடி பட்ட அக்கணமதில்
கல்லாகிய மாது சீவனுடன் விடுபட்டாளே.

46. கௌதம மகாமுனிவரே சினத்தினின் தோன்றலாம்
கௌதம மகாமுனிவரின் பத்தினியாம் அகல்யாதேவி
தேவஇந்திரன் அவளிடம் கெட்டன செய்ததால்
அகலிகை கல்லானாள் மாமுனிவரின் சாபத்தினால்.

47. மௌலிதனை சூட்டும்நாள் வந்ததே அயோத்தியிலே
ரகுவம்ச வாரிசாம் திருராமன் நகர்வலம்போனாரே
ஆசிபெற்றார் சுமித்திரை கோசலை தாயாரிடம்
தந்தைபேரரசர் தசரதர் மனம் மகிழ்ந்தாரே.

48. மடந்தை மந்தரை ஓர்கூனிக் கிழவியாம்
விடலைப் பிராயத்தில் இராமன் எள்ளிநகைத்தவராம்
சேடிமகள் உருவில்வந்தாள் விதியின் தூதாகவே
ஓடிச்சென்று கைகேயி இராணியிடம் வம்புபேசினாளே.

49. ஆழிசூழு லகமெல்லாம் பரதன் ஆளவேண்டும்
ஏழிரண்டாண்டு இராமன் கானகம் புகவேண்டும்
கைகேயி அன்னையின் சொற்களைப் பணிந்தானே
திருராமன் நிலமகளுடன் தண்டகாரண்யம் புகுந்தானே.

50. தயரதன் புத்திரசோகத்தில் நிதன மடைந்தனரே
செயராமன் அயோத்திநகர் வர மறுத்தனரே
இளவல் பரதன் சரயுநதிதீரம் வந்தணைந்தாரே
இரகுராமன் தன்பாதுகை களைக்கொண் டேகினாரே.

51. ஆழநீர்க் கங்கையைக்கடந்து ஆரண்யம் புகவேண்டும்
தோழன் இலக்குவன் நங்கைபுவிமகள் சேர்ந்திருந்தனர்
வேடன்குகன் என்ற நல்லாண்மைக் குலமகனாம்
நாடிநின்று தெப்பத்தில் எற்றிச் சென்றனரே.

52. தசரதனின் மக்களாம் நால்வராம் நாங்களே
நெசமெனவே நினைந்திட்டேன் குகனோடு ஐவராம்
ஆலிங்கனம் செய்திட்டான் வேடன்குகன் தனையே
மேல்மகனாம் இறைவனுக்கே தெப்பம்நடத்திய வனையே.

53. மரவுரி தரித்திட்டார் சானகியுடன் இராமலக்குவர்
இரவெல்லாம் அச்சம்தரும் தண்டக வனத்திலே
பஞ்சவடி என்றதலத்தில் மண்குடிசை வாசமே
வஞ்ச எண்ணமாய் வந்தசூர்ப்பனகை நாசிதிருத்தவே.

54. பெண்மனம் எப்பொழுதும் பேதலிக்கும் அல்லவா
தண்மனது சானகியும் அதற்கு விலக்கல்லவே
தங்கநிற மானினம் உலகில் எங்குமில்லையே
தங்கிநின்று அதைக்கேட்டாள் திருராமபதியிடமே.

55. மாரீசன் என்றஅரக்கன் மாயமானாய் வந்தனன்
சாரீரம் தனைக்கண்ட இராமனம்பு தைத்ததால்
இலக்குவனே உதவிக்குவா தம்பியே தாவிவா
பக்குவமாய்க் கூவிவிட்டான் சிவனைவிட்டு விட்டான்.

56. புவிமகளாம் சானகியே தெய்வப் பிறவியாம்
செவிமடுத்தாள் திருராமனின் குரலெனும் மாயையை
தங்குநடை ஈசனவள் நாவில் இடம்கொண்டான்
இளவலே என்னைநீங்குவாய் உடனேயே என்றனள்.

57. தனயன்சொல் மீறமாட்டேன் உனதுகாவல் விடமாட்டேன்
வினயமாகப் பகர்ந்தானே ஆதிசேட மூர்த்தியே
சொற்களங்கம் பேசினாள் சனகனின் காரிகையே
இளவல் கோடிட்டான் அன்னைக்கு விடைகேட்டான்.

58. இலக்குவனே மோசம்போனாய் ஏனப்பாநீ வந்தாய்
எக்குலத்தைக் காக்கவேண்டி நீயெடுத்த கடமையெல்லாம்
சட்டெனவே திர்த்திட்டான் அரக்கனே என்றிட்டான்
பெட்டாக ராவணன்சீதையைக் களந்ததை உணர்ந்திட்டான்.

59. எங்கெங்கு நோக்கிடினும் கெட்ட நிமித்தைகளே
செங்கரமதைப் பிடித்திட்ட இராமபிரான் கண்டிட்டார்
வனமெல்லாம் தேடினார் நதிதீரமெல்லாம் அலைந்தார்
மனம்தளர்ந்த தருணத்தில் சடாயுபுள்ளினைக் கண்டார்.

60. புள்ளரசன் சடாயு பெரியதிருவடிக்குத் தனயனே
தசரதனின் நீண்டநாள் நண்பனாம் சடாயுவே
குருதியுடன் மலைமுகட்டில் கிடந்தார் தீனமாய்
அன்பர்க்கு உரைத்திட்டார் ராவணன்சீதையைக் கவர்ந்ததை.

61. நான்கண்டேன் கருமேக மூட்டத்தின் நடுவிலே
தேன்கொடியாள் அரசியாரை இராவணன் சினந்ததை
கோன்மகளே அழுதிட்டே போராடித் தோற்றனளே
தடுத்திட்ட என்சிறகைக் கொய்தானே ராவணனே.

62. சிருங்க பர்வதத்தில் வாலிசுக்கிரீவன் இராச்சியமாம்
மருங்கில் நின்றுவாலியை வதைத்தான் இராமநாதனே
தாரையுடன் சேர்ந்திட்டான் சுக்கிரீவன் அரசனானான்
அனுமனாம் நானே வந்திட்டேன் அவர்நிமித்தம்.

63. இத்துணையும் பகர்ந்திட்டான் சொல்லின் செல்வனே
மங்கலமாம் இராமன்தந்த கணையாழியைத் தந்தாரே
சானகியே கூர்ந்திட்டாள் அத்துணை தகவலையும்
வானரம் அனுமன் திருராமனின்தூதனென் றுணர்ந்திட்டாள்.

64. கண்கள் குளமானதே மெய்யெல்லாம் சிலிர்த்ததே
மண்மகள் நினைத்திருந்தாள் எதிர்காலம் இருண்டதென்று
மறுஜென்மம் வந்ததென்று உணர்ந்தாள் அவளே
வானரம் உருவிலே நன்மைவந்ததே என்றாள்.

65. அனுமனே நீயே இராமதூதனாய் வந்திருப்பாய்
அனுமனே நீயே எனையுடனழைத்துப் போவாய்
ஆனாலும் அதுயெனது பதிக்கு இழுக்கல்லவே
நானின்னும் காத்திருப்பேன் பதியிலங்கையை வெல்வதற்கே.

66. தன்னுணர்வைக் காட்டவேண்டுமென அனுமன் எண்ணினான்
தன்பலத்தால் அசோகவனத்தை நாசங்கள் செய்தான்
இராமதூதன் அரக்கர் சபைமேவி நின்றான்
இராவணனோ அஞ்சனை மைந்தனை அவமதித்தான்.

67. துரும்பேயாம் வானரமே இலங்கையேன் வந்தாய்
மருங்கே யாருமில்லாமல் தனியேயேன் வந்தாய்
சட்டென்று பதிலுரைத்தான் கேசரி மைந்தன்
மட்டென்று நினைத்திட்டு அன்னையை அனுப்புவையே.

68. அழித்திடுங்கள் வானரத்தை என்றிட்டான் அரசன்
பழிச்சொல் வந்திட்டதே இராவணத் தோன்றலுக்கே
தூதனை மதியாதார் அரைய னல்லவே
அனுமனும் பொருதிட்டே மாளிகை நீங்கினான்.

69. அரக்கர் சேனை அனுமனுடன் பொருதிட்டனரே
சிறப்பாக போரிட்டதால் வெல்லல் இயலாதே
பிரம்மாஸ்திரம் ஏவிவிட்டான் இந்திர சித்து
பிரம்மனுக்காக அனுமன் கட்டுண்டான் அம்புக்கே.

70. குதித்தாடினார் அரக்கர்கள் திளைத்தனர் இரும்பூதுடன்
பந்தனம் செய்தனர் பிணைக் கயிற்றால்
நிந்தனை செய்தனர் அனுமன் பலமறியாதே
பிரமன் மந்திரம் விடுபட்டதே அரக்கரின் சேட்டையினால்.

71. நிறுத்தவில்லை அரக்கர்சேனை சேட்டை களை
மருந்திட்டு வைத்திட்டார் அழலைவால் நுனிதனிலே
அனுமனுக்கு அதுவரை சினம் பொறுத்திட்டதே
சினமனைத்தும் வெளிக் கொணர்ந்தான் இலங்கைமீதினிலே.

72. ஒருபொழுதுதனில் இலங்கை வதனத்தைப் பிரமித்தானே
இப்போதுதனில் இலங்கை வதனத்தைக் கலைத்தானே
சுட்டெரித்தான் இலங்கை நகரமதை வாலழலால்
வாலேதான் வானரத்திற்கு விருப்பமான அங்கமாம்.

73. இலங்கேஸ்வரன் நினைந்திட்டான் முற்கால மொழியதனை
பங்கம் வரும் இலங்கைக்கே ஒருவானரம் வரும்போதில்
நங்கைநல்லாள் சானகியைத் தந்தானே நகரக்கே
அங்கையிலே அழலை நான்கொண்டேன் ஊழேயென்றான்.

74. அங்கதன் முதலாம்வானரர் சுக்கிரீவனிடம் நின்றனரே
சிங்கமென இளவலுடன் திருராமனும் அமர்ந்தாரே
சிருங்கமுக மலைமுகட்டில் காத்திருந்தார் செய்திக்கே
மருங்கிலே தாவிவந்தான் சுந்தரமாம் ஆஞ்சநேயன்.

75. கண்டேன் அன்னையை ஆசித்தனுப்பினாள் உன்னிடமே
மண்மங்கை சானகியைக் கண்கலங்கி நோக்கிட்டேன்
தவமிருக்கும் தனியாளை வளைநெகிழ்ந்த கோலத்தில்
தேவதையைக் கண்டுவிட்டேன் கற்பின் அணிகலனாய்.

76. உன்னைக் காணவே உயிரிட்டாள் மெய்யிடமே
உன்னைப் போற்றுகிறாள் இலங்கை மன்னனிடமே
உன்னல்லால் யாரையுமே எதிர்நோக்காள் கண்டேனே
உன்னால்தான் விமோசனமென சேதிசொன்னாள் அன்னையே.

77. கற்பூர சோதியாய்க் கண்டேன்நான் பூமகளை
கற்பிக் கணிகலனாய்க் கண்டுவந்தேன் பெம்மானே
வையகமே உனக்குவேண்டாம் அன்னையே போதுமினே
ஐயமில்லாமல் பகருகிறேன் பாக்கியமே நான்செய்தேன்.

78. கண்கள் குளமாகி மெய்யும் நெக்குருகிய
மண்மகளின் தோற்றத்தை விவரித்தான் அண்ணலுக்கு
செயற்கரிய செயலைச் செய்துவந்தான் அனுமனே
செயத்துடன் வந்தஅன்பன் சொல்லின் செல்வனே.

79. சுந்தர காண்டத்தை என்நாவில் செப்பிட்டேன்
சுந்தர ராசனாம் கேசரியின் தலைமகனை
வானரவேந்தனே சுக்கிரீவா என்னதவம் செய்தாய்
வானரமாம் மாருதியை உன்னிடமே வைத்திருக்க.

80. மனதிலே திருராமன் நினைத்து மருகிட்டான்
மனதால் அவனாலே தாங்க வொண்ணாது
கண்டேன்எனும் சொல்லல்லாது வேறொரு மொழியை
கண்டேன்எனப் பகர்ந்தான் அஞ்சனை மைந்தனே.

81. செயமளிக்கின்ற எந்தமுயற்சி யினையும் நம்மால்
செயமாக வேண்டுமெனில் முதற்படி வெல்லவேண்டும்
வழியதனைக் காட்டி விட்டான் செயமாருதியே
இலங்கைதனை ரூபமிட்டான் என்கோ திருராமனுக்கே.

82. அன்றே அறுதியிட்டான் திருராமன் அவன்மனதில்
பிறர்க்கின்னா முற்பகல் இராவணன் செய்தானே
தமக்கின்னா பிற்பகல் கற்பிக்க வேண்டாமோ
இலக்குவனே வழிசொல்வாய் இலங்கைதனை வெல்லவே.

83. சுக்கிரீவன் அரசவையைக் கூட்டி ஆலோசித்தான்
மக்களெல்லாம் வானரராம் அவனது ஆட்சிதனில்
வாலிமகன் அங்கதனாம் இளவரசர் அவரை
மேவிடலாம் இவங்கைக்கே தூதராக என்றனர்.

84. ரிஷ்யமலை இருந்தயிடம் பாதாமி அரியணை
ரிஷிகளெல்லாம் தியானித்த புண்ணிய பூமியாம்
இளவரசர் அங்கதன் வணங்கியே நின்றான்
பேரரசர் திருராமனைத் துதித்து நின்றான்.

85. மனமொன்றி இயக்கந் தனில் இறங்கிட்டான்
வனத்திலிருந்து அம்பு போலப் புறப்பட்டான்
கணப்பொழுதில் இலங்கை தனை யடைந்திட்டான்
அரண்மனையில் அரசவையில் நின்றிட்டான்.

86. வாலிமகன் வந்துள்ளேன் என்றே பகர்ந்திட்டான்
ஞாலம்புகழ் இலங்கைமன்னா நான் தூதனாவேன்
சாலநன்றாம் புவிமகளைக் கவர்ந்து வந்தாய்
மாலவனாம் திருராமனிடம் அன்னையை அனுப்பிடுவாய்.

87. மன்னுபுகழ் கோசலை மைந்தன் திருராமனே
தென்னிலங்கை மன்னனே நீதீங்கி ழைத்தாய்
என்தந்தை வாலியோயுன் தோழ னாவான்
தோள்வலிமை யவரையே அழித்திட்டார் திருராமனே.

88. அனுமன் பகர்ந்திட்டான் சீதை யிருக்கின்றாள்
வனமாகும் அசோகமர சிறையிலி ருக்கின்றாள்
மனத்தைச்சரி செய்து அவளை யனுப்பிடுவாய்
சினம்கொள்ள மாட்டான் இராமனே என்றிட்டான்.

89. அமைதியினை சுட்டிக் காட்டினாயா தூதனே
அமைதியினை நான்விரும்பேன் என்றே கூறிடுவாய்
மானுடனாம் இராமனென்ன என்னிலும் வலியவனோ
வானரமே உடனே சமரென விளம்பிடுவாய்.

90. வீடணன் என்றொரு இளவல் உனக்குண்டு
வீடணன் அடைந்திட்டான் சரணாகதி இராமனிடம்
வீடணன் தமையனாய் நீதப்பிப் பிறந்திட்டாய்
மூடனே மதியிலனே நிலமகளை விட்டிடுவாய்

91. மரவுரியில் வந்துநின்றார் இலங்கை மண்ணிலே
கடலரசன் துணையுடனே சேனையும் வந்ததே
இளவல் இலக்குவனும் உடனேகி வந்தனரே
சாகரமாய் வானரர் படையாகி நின்றனரே.

92. மூர்க்கனும் முதலையும் தன்பிடியை விடமட்டார்
மூர்க்கன் இராவணனும் இதன் விலக்கல்லவே
பதர்நீயே வானரமே ஓடி ஒளிந்திடடா
சேனையிடம் ஆணையிட்டான அங்கதனைப் பிடித்திடவே.

93. அங்கதன் யுவராச வீரன் அல்லவா
இலங்கைபுரி மாடமாளிகை களைப் பிளந்திட்டே
ஆங்காரம் கொண்டிட்ட மன்னனை அழிப்பேன்
ஹுங்காரம் செய்திட்டு தீவினின்று விலகினனே.

94. தூதனாம் யுவராச அங்கதன் பணிந்திட்டே
பாதாரமதை வணங்கி இராமனிடம் பகர்ந்திட்டான்
என்னையும் அவமதித்தான் தங்களை நிந்தித்தான்
அரக்கனை அழித்திடவே ஆணையைவேண்டி நின்றான்.

95. இரதகஜதுரக பதாதிகளும் வானர வீரர்களும்
மதயானையென மடலெனவே இலங்கையை அணுகினரே
வீணைக்கொடி வேந்தன் பொருதிடவே வந்துநின்றான்
மனோரதம் கொண்டிட்டான் இராமனை வீழ்த்திடவே.

96. இந்திரசித்து என்பவன் சித்துக்களின் அரசனே
நாகாஸ்திரம் வருணாஸ்திரம் எய்தி நின்றானே
ஆகாவென திருராமன் பிரயோகம் செய்திட்டார்
கருடாஸ்திரம் அக்னியாஸ்திரம் இவை யாவையுமே.

97. அஞ்சனை மைந்தனின் தோளிலே ராமன்நின்றனரே
தன்னுடைய வீரத்தால் இராவணனை வீழ்த்தவே
கொடியதனை வீழ்த்தினரே கொற்றத்தை வீழ்த்தினரே
கவசத்தை வீழ்த்தினரே தேரினை வீழ்த்தினரே.

98. நிராயுத பாணியாய் நின்றான் இலங்கை வேந்தன்
நிராயுதனைக் காணவே நாணினான் கதிரவனே
மேற்கடலில் வீழ்ந்துவிட்டான் இருளினைத் தந்திடவே
ஸ்ரீராமன் அனுமதித்தான் இன்றுபோய்நாளை வாவென்று.

99. மலையெனவே துயிலுற்றிருந்த கும்ப கர்ணன்
நிலைக்குவர முயன்றிற்றார் அரக்க ரெல்லாம்
உலக்கையினில் அடித்திட்டார் உடம்பதிலே வதைத்திட்டார்
சினத்துடனே எழுந்திட்டான் மன்னனிடம் ஏகிடவே.

100. தசமுகனின் தம்பியாம் கும்ப கர்ணனும்
தமையனிடம் இயம்பிட்டான் தவறிழைத் தாயென
செஞ்சோற்றுக் கடனை நான் தீர்த்திடுவேன்
துஞ்சிடுவேன் உனக்காக சமர் செய்திட்டேயென.

101. வீரத்தின் தலைவனாம் கும்ப கர்ணனும்
மாயாவியாய் உக்கிரத் துடன்சம ரிட்டான்
சுக்கிரீவனுடன் வேங்கை யாய்ப் பொருதிட்டான்
முடிவும் வந்ததே வீழ்ந்தானவன் திருராமனிடம்.

102. இந்திர சித்து படையுடனே வந்திட்டான்
மந்திர மாம்வியூ கங்களுடன் போரிட்டான்
அஞ்சனை மைந்தன் அவனுடன் சமரிட்டான்
இலக்குவன் வீழ்ந்துவிட்டான் நாகாஸ்த்திரத் தினாலே.

103. சாம்பவான் அனுமனிடம் ஆக்ஞை யிட்டான்
ஔஷதி மலைக்கே காற்றினிலே ஏகிட்டான்
மேருமலையில் சிவனாரைத் தரிசித்தான்
சஞ்சீவினி மலையைப் பெயர்த்துத் தந்திட்டான்.

104. இதுகாறும் அஞ்சனனே நீ இளவலானாய்
இப்போது இலக்குவனைப் பிழைக்கச் செய்தாய்
இரகுகுலத்தை நீ இப்போது காத்ததினால்
என்குலத்தில் பெற்றோரின் நிலை யடைந்தாய்.

105. தாய்தந்தை யானவனே அஞ்சனை மைந்தா
எப்பேறு பெற்றிற்றோம் உன்னை யடைய
திருராமன் விவரித்தான் மாருதியின் பெருமையை
மெய்சிலிர்த்தான் ஏகினான் திருராமன் திருவடியை.

106. கடுகெனவே மலை சுமந்து பறந்திட்டான்
கயிலாய மலையிலே சஞ்சீவி இறங்கிட்டான்
தேவர்களை தொழுது மலையை வைத்திட்டான்
புண்ணிய மைந்தன் இராமனிடம் வந்துவிட்டான்.

107. இந்திரஜித்து மறுபடியும் போர்க்களம் வந்தான்
மாயமாக சீதையெனும் உருவம் ஒன்றை
வாளால் கொய்து எல்லோர்க்கும் காட்டிட்டான்
வீடணன் விவரித்தான் மாயாவியின் செய்கையினை.

108. இலக்குவன் போர் செய்தது மிகவிந்தை
இலக்கிட்டு அஸ்திரங் களைச்சொரிந் திட்டான்
இருபடைக ளிலும்படை வீரர்கள் அமரரானார்
கடைசியில் இந்திரசித்து இயற்கை எய்தினான்.

109. இலக்குவன் வென்றிட்டான் இராவணன் மைந்தனை
இந்திரனை செயித்தவன் இந்திரசித்து ஆவான்
திருராமன் புகழ்ந்திட்டான் இளவலையும் மாருதியையும்
இனிநாம் ராவணனை வெல்வதுஎளிதே என்றான்.

110. குருமுனி அகத்தியர் போர்க்களம் வந்தனரே
பெருமதி அரசனாம் இராமச்சந்திரனை வாழ்த்தினாரே
பரிதியின் பலத்தை யடையவழியைப் பகர்ந்தனரே
ஆதித்ய ஹ்ருதயம் மந்திரங்களை உபதேசித்தினரே.

111. ஆதித்ய ஹ்ருதயம் புண்யம்சர்வசத்ரு வினாசனம்
ஆதித்யகுலத் தோன்றலே செயமடைவாய் செபித்திட்டால்
அஷ்டஐஸ்வர்யங்களை அடைந்திடுவாய் சுபங்களை நீயடைவாய்
என்றேஆசித்திட்டார் போர்வெல்ல வழிசெய்தார்.

112. இரகுவம்சத்தில் பிறந்தவன் இரகுராமன் ஆவான்
இரகுவம்சத்தின் நாயகனைத் தொழுதவன் மாருதி
இராமன் என்பவன் அறிவின் நாயகனாம்
இராமனைத் தொழுதால் அறிவால் செயமடையலாம்.

113. பலமடைய அனுதினமும் பரிதியைத் தொழுவாய்
பலமெலாம் பரிதியின் சக்தியில் சிறிதளவேயாம்
பலராமன் பிறிதொரு காலம் பிறந்திட்டான்
ஹலாயுதம் பெருமானின் பலத்தின் அம்சமே.

114. தசமுக அரசன் சமருக்கு வந்தனனே
தமோகுண வீரனாம் தாசரதியை நோக்கினனே
சிரமெல்லாம் கொய்தான் இராமன் வரிசையால்
சிரமற்றுப் போகவில்லை இலங்கை வேந்தன்.

115. இரகுகுலத் தோன்றலுக்குக் கூறினான் மாருதி
இரகுராமா யெடுத்திடுவாய் பிரம்மனின் அஸ்திரமே
பிரம்மாஸ்திரம் தலையாய மந்திரமாம் வெற்றிக்கு
பிரமமுயற்சி யாவற்றிலும் செயத்தை யருளுமே.

116. பிரம்மாஸ்திரத்தில் வீழ்ந்திட்டான் அரக்கரின் அரசன்
பிரமத்தைத் தழுவி விட்டான் சிவனின் பக்தன்
சிவபக்த னுக்குமுக்தி யருளிட்டான் நாராயணன்
நாரணன் தடுத்தாட் கொண்டது தண்டனையளித்தே.

117. வீடணன் கதறியழுதான் தனயன் நிதனத்தால்
வீடணனுக்கு முன்பேதெளிவு தமையனின் மறைவு
வீடணன் பெருமாளின் பக்தனே யாவான்
வீடணன் அடைந்திட்டான் பேரரசு பதவியையே.

118. மண்டோதரி நோக்கினளே இலங்கை வள்ளலை
மாய்ந்திட்டாயே மாவேந்தனே பெண்டிர் ஆசையால்
பிரபஞ்சத்தையே வென்று செயக்கம்பம் நாட்டினையே
அரற்றிப் புலம்பினாளே கற்புக்கரசி மாதாவே.

119. மாருதி உடனேகினன் நிலமகள் சீதையிடம்
ஆரண்ய அசோகத்தில் சோகம் நீக்கிடவே
இராமபக்தன் வீடணனே இலங்கை யதிபதி
இராமனின் பத்தினி நீயே விடுதலையேகினாய்.

120. நிலமகள் பேச்சில்லா மடந்தையாய் நின்றாள்
நாவெல்லாம் கட்டுண்டதே மாருதியை நினைத்தே
சொல்லின் செல்வன் உன்னையே ஆராதிக்கிறேன்
நீயல்லவா தலைவனிடம் என்னிலையைப் பகர்ந்திட்டாய்.

121. வழியைக் காட்டிவிட்டாய் திருராம மூர்த்தியிடம்
இலங்கை மாநகருக்கு அவரையே அழைத்தேகினாய்
அரக்கர் குலத்திடம் அடைந்திட்ட தொல்லைகளை
செருக்குடனே செயமடைந்து விடுவித்திட்டாய் நீதானே.

122. அனுமன் வாஞ்சையுடன் அடிபணிந்தான் சீதையுடன்
சினமே கொள்ளாத வானரத்தோன்றல் சஞ்சீவி
நானென்ன பகரட்டும் என்தலைவன் இராமனிடம்
என்றே வினயித்தான் மாருதி கருணையுடன்.

123. அனுமன் வந்தடைந்தான் இரகுகுலத் தோன்றலிடம்
தனயனிடம் தலைவணங்கி விவரித்தான் விவரத்தை
வைதேகித் தாயாரை ஏற்றுக் கொள்வாய்நீயே
மாதரசி இக்கணத்தில் இங்கே வரவேண்டும்.

124. வீடணன் அரசிமார்கள் சீதையைக் கொணர்ந்தனரே
இராமன் அருகாமையில் சீதையைத் தந்தனரே
இரகுகுலத் தோன்றல் உணர்ச்சிப் பெருக்குடன்
ஓருநிமிடம் நோக்கினான் நிலமகளை நன்றாக.

125. அப்பொழுதுதான் நடந்தது உலகின் பெரும்பாவம்
கணப்பொழுதில் திருராமன் சினத்துடன் பகர்ந்திட்டான்
பிறஆடவன் அருகாமையில் இத்துணை நாளிருந்தாய்
பிறஆடவன் காமநோக்கில் நீயே இருந்திட்டாய்.

126. அதனாலே இக்கணமே உன்னையே நான்பிரிவேன்
எதனாலும் என்முடிவை மாற்ற இயலாது
என்றிட்ட பேரரசனின் ஆக்கினையை நோக்கி
செயலற்று நின்றிட்டார் சுற்றிலும் அனைவரும்.

127. பூமகள் வதனம் உடனே பொலிவுற்றது
என்னுடைய தெய்வமேநீவிர் உன்னுடைய பொருளேநான்
எனதுசீவனும் உடலும் நின்னுடையதே யாகும்
உனதுமனையாள் நான் தூயவளென மெய்ப்பேன்.

128. இளவலைக் கேட்டிட்டாள் அழல்மூட்டுவாயென
இளநகை புரிந்தவளே அழலில் இறங்கிட்டாள்
ஐம்பூத அரசனாம் அக்கினியே அஞ்சிட்டான்
நிலமகளை பரிசுத்தமென அலங்கரித்து அளித்திட்டான்.

129. இறும்பூ தெய்திட்டான் இரகுகுல தாசரதியே
சிறப்பாகத் தடையினையே வென்றிட்டான் சீதையென
அனுமனும் அன்னையைப் பணிந்திட்டான் அக்கணமே
விண்ணிலிருந்து பூமாரி பெய்ததுவே உவகையினால்.

130. மேனியிலும் பிரகாசம் மனதிலுமே பிரகாசம்
அவனியிலே சீதையெனில் கருணையின் அவதாரம்
கணவரின் மனதினையே அவள் வினவினாளில்லை
சோதனை செய்தவருக்கு மெய்ம்மையைக் காட்டினாளே.

131. வானவர் அக்கணம் இரதத்தினிலே தந்தையை
மானவனாம் இராமபிரானின் அன்புகுரு தசரதனை
இலங்கைபுரி மண்ணிலே உயிருடனே கொணர்ந்து
அன்புமகனை உச்சிமுகர ஆயத்தம் செய்தனரே.

132. போதுமய்யா நீசெய்த கடமைகள் எல்லாம்
சீதைமாது தன்னுடனே அயோத்தி மீள்வாய்
பட்டம்சூடி நீபேரரசனாகத் திகழவே வேண்டும்
இலக்குவனே நீஎப்போதும் தனயனைக் காப்பாய்.

133. என்றிட்ட தந்தையிடம் விண்ணப்பம் தந்தான்
மண்டியிட்டு வணங்கிட்டு ஆலங் கனித்தான்
தந்தையே நீவிர் கைகேயித் தாயைமன்னிப்பீர்
தந்தையே நீவிர் பரதனையே அன்புசெய்வீர் என்றான்.

134. இந்திரமகேந்திரன் அருள் கொடுத்து நின்றார்
மந்திரத்தால் சேனையிலே எல்லோரையும் உயிர்ப்பித்தார்
குதூகலம் நிறைந்திட்ட அந்த வேளையிலே
புஷ்பக ஊர்திவந்ததே இராமனை அழைத்ததே.

135. அனுமனே உடனேநீ அயோத்தி செல்வாயே
மனுநீதி சகோதரன் பரதனைக் காத்திடவே
மரவுரியுடன் எம்பி பரதன் நிற்கின்றான்
ஆத்தும தியாகம் செய்திடுவான் நானேகவில்லையேல்.

136. சொல்லின் செல்வன் உடனேயே சரயுநதியடைந்தான்
அழல்முன்னே நின்றிருந்த பரதனை யடைந்தான்
நிற்கஅன்பனே மெய்யனே ஒருகணம்
சற்றும் பொறுக்காமல் உயிர்த்தியாகம் செய்வாயோ.

137. அனுமனை அறிந்துகொண்டான் இளவல் பரதனும்
மனத்திலே தமையனின் உருவத்தை நினைத்தே
பரத்வாச முனிவர் ஆசிரமம் வந்திட்ட
இராமனின் உருவத்தை ஆலிங் கனித்தே.

138. தில்லை விளாகம் என்றொரு திருத்தலமாகும்
திருத்துறைப் பூண்டி கோடியக்கரை அண்மையாகும்
பரத்வாச குடிலுக்குள் இன்றும் நாம்காணலாம்
மெய்யெல்லாம் வடுவுடனே திருஇராம மூர்த்தியை.

139. எங்கேகினும் அனுமன் நற்செய்தியே அருள்வான்
சுக்கிரீவனுக்கும் நற்செய்தி சீதைக்கும் நற்செய்தி
இராமனுக்கும் நற்செய்தி சஞ்சீவிமலையுடன் நற்செய்தி
இராவணின் வதைதானே இராமஜெயமெனும் நற்செய்தி.

140. பரதனுக்கு நற்செய்தி பக்தருக்கு நற்செய்தி
சுந்தர காண்டத்தின் தலைவனால் நற்செய்தி
நன்மையே பேசிடுவான் நன்மையே அருள்வான்
அனுமனைத் தொழுதால் எப்பொழுதும் நற்செய்தி.

141. தலைவன் இராமபிரான் தியாகச் சிகரமே
அயோத்தி மாநகரை வேண்டினா னல்லன்
கிட்கிந்தை அரசினை வேண்டினா னல்லன்
இலங்கை அரசினை வேண்டினா னல்லன்.

142. மண்ணாசை பொன்னாசை யில்லாத தலைவன்
பெண்ணாசை இராவணனை அழித்திட்ட தலைவன்
கர்மயோகம் சாதித்த இரவிகுலத் தலைவன்
திரேதயுகத்தில் மானுடனாய் வாழ்ந்திட்ட தலைவன்.

143. மறுயுகத்தில் கிருஷ்ணனாய் பகர்ந்திட்ட கர்மயோகந்தன்னை
முன்னமேயே வாழ்ந்துகாட்டிவிட்டான் திருராமமூர்த்தியே
திருமாலின் மறுஅம்சம் பரதமகா புண்ணியன்
விரும்பிக் கேட்டதால் பட்டம் சூட்டிக்கொண்டாரே.

144. இராமராஜ்யம் பற்றிநாம் செவிவழியில் அறிவோம்
அமைதிசெல்வம் நிறைமனது நிரம்பி யிருந்ததே
திருட்டும் புரட்டும் யாரும் கண்டதில்லையே
மும்மாரி எப்பொழுதும் நிரம்பி யிருந்ததே.

145. அறநெறி பிறழாமல் மக்கள் வாழ்ந்தனரே
அன்பும் அமைதியும் நிரம்பி யிருந்ததே
முனிசிரேட்டர் யாகங்கள் எல்லாம் செய்தனரே
அனுமன் தலைவணங்கி சீதாராமனுடன் விளங்கினரே.

146. திருராம பட்டாபிஷேகம் யாவருக்கும் இனிப்பேயாம்
தலைவன் மகுடம் சூட்டினால் மக்களுக்கு இனிப்பேயாம்
பரிபூரணத் தலைவனாகத் திருமால் வந்திட்டு
பூதேவி மகளான சீதையுடன் வாழ்ந்திட்டான்.

147. இரதகஜ துரகபதாதி களாம்நக ரெங்குமே
இதமாக நால்வேத கோஷங்கள் ஒலிக்குமே
வானர சிரேஷ்டரெல்லாம் ராமநாமம் செபிப்பாரே
அஞ்சனை மைந்தன் எழுகடல் நீர்கொணர்ந்தாரே.

148. பெருமாள் திருராமர் சீதையுடன் திருமஞ்சனமாடி
பரிமள சுகந்தம் பன்னீர் அணிந்தனரே
திவ்விய கிரீட கேயூரஹாரம் மேனியிலாட
மேவிய பொற்பாதுகையில் திருவடி புனைந்து

149. மங்கல மங்கையர் ஆரத்தி யெடுத்து
இராமநாம வேதங்கள் எங்கும் ஒலிக்க
அத்தாணி மண்டபத்தில் நவரத்தினங்கள் பதித்து
ஸ்வர்ண அரியணையில் ஸ்ரீராமன் அமர்ந்தாரே.

150. வசிட்டர் மகாமுனி ஆசிகளை வழங்கிட்டார்
இளவல் பெருமாளுக்கே கொற்றம் பிடித்தார்
பரத சத்ருக்னர் வெண்சாமரங்களை வீசிடவே
அருமை அனுமன் பாததூளிகையைப் பணிந்தார்.

151. வானர வீரர்களெல்லாம் வரிசையாய் நின்றே
பேரரசனாம் திருராமரிடம் பரிசுகள் பெற்றனரே
அந்தணப் பெரியோர் கோதானம் கொண்டனரே
வீடணன் சொர்ண கிரீடம்பெற்றுப் பணிந்தனரே.

152. இரகுநந்தமூர்த்தி மனசேல்லாம் அனுமன் பிரபாவம்
சொகுசாக எத்துணை விந்தைகள் செய்தனனே
விசுவாசம் நிறைந்து கண்கள் நீரைச்சொரியவே
சீதாராமர் மங்கள மாலையொன்று அனுமனுக்களித்தார்.

153. அஞ்சனை மைந்தனே கேட்பது அருளுகின்றேன்
நெஞ்சினின்று பகரவே திருராமன் ஆக்ஞித்தார்
சதாகாலம் நினதுநாமம் செபித்திடவே வேண்டும்
நின்நாமம் செப்புகின்ற இடமெங்கும் என்சேவைவேண்டும்.

154. திருமுடிசூட்டு நிகழ்ச்சியெல்லாம் இனிது முடிந்ததே
மட்டில்லா மகிழ்ச்சியுடன் அனுமன் அமர்ந்திட்டே
பெருமான் அளித்திட்ட மணியெல்லாம் சிதறிட்டே
மருவின்றி பெருமானின் உருவத்தைத் தேடினாரே.

155. இக்கூத்தை எல்லோரும் பரிகசித்து நகையாட
பக்குவமாய் ஆஞ்சனேயர் அவரைக் கனிவுடனே
நோக்கெல்லாம் திருராமன் இதயத்தில் திருராமர்
என்றுமார்பைக் கிழித்தங்கே சீதாராமனைக் காட்டினாரே.

156. எல்லோரும் நெடுஞ்சாண்கிடையாய் அனுமனை வணங்கி
திருராமர் அனுமனின் பெருமையைக் காட்டியேவியந்தார்
மாருதியேநீ சேதுசமுத்திரம் செல்வாய் உடனே
இலங்கையின் அதிபதி வீடணனைக் காத்திடுவாய்நீயே.

157. என்றிட்ட ஆணையினை அன்பன் சிரமேற்கொண்டான்
குன்றெனவே நூறாயிரமாண்டு இராம ராஜ்ஜியமாம்
சென்றிட்ட அனுமனின் ராமநாமம் ஒலித்திடுமாம்
சிரஞ்சீவியென நின்றான் சஞ்சீவ ராயனவன்.

158. ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெயராம்
கோசலராமன் தசரத ராமன் சீதாராமன்
இரகுராமன் ஆனந்த ராமனாம் பட்டாபிராமன்.

159. இராமநாம சங்கீர்த்தனம் தாரக மந்திரம்
இராமநாம கோஷமெல்லாம் பிறவியைத் தவிர்த்திடும்
இராமநாம சுகராகம் வல்வினை போக்கிடுமே
இராமநாம வேள்வியே பரிபூரண பாக்கியமே.

160. நிலமகள் சீதையின் விதியோ வேறுவிதம்
புவிமக்கள் கற்பின் மாதினை ஏற்கவில்லை
சலவைப் பணிமகன் நிலமகளை எங்கனம்
இரகுராமன் ஏற்றிடலாம் என்றே மொழிந்தான்.

161. அக்னியில் விழுந்தெழுந்த சானகியை ஏற்கவில்லை
தெற்கினில் இலங்கையில் இருந்து வந்தனளே
சானகி பட்டத்திற்கு தகுதியில்லை என்றனர்
ஸ்ரீராமன் புறக்கணித்தார் இளவல்மூலம் அனுப்பிட்டார்.

162. வால்மீகி மாமுனிவர் சானகியை அரவணைத்தார்
திருராமன் யோகக்ஷேமத்திற்கே அனுப்பினார் என்றார்
திருமகள் தந்தையிடம் பேற்றிற்காக வருவரல்லவே
நிலமகளும் மகிழ்ச்சியுடன் முனிவருடன் சேர்ந்தனளே.

163. நன்னாளில் அன்னை லவனை ஈன்றெடுத்தாள்
லவனை ஒருநாள் தொட்டிலிலே இட்டிருந்தாள்
வால்மீகிமுனி தொட்டிலில்மகவு காணாததுகண்டு
தருப்பைப் புல்லையிட்டு குழவிகுசனா யாக்கினரே.

164. லவகுசன் இருவரும் திருராமனின் மைந்தர்கள்
இரகுவம்சத் தோன்றலாய் குடிலில் வளர்ந்தனர்
உபநயனம் முடிந்தது குருகுலம் கழிந்தது
வில்லாதி வீரராய்ப் பிள்ளைகள் வளர்ந்தனர்.

165. பட்டாபிராமர் பேரரசனாக முடிசூட்ட வேண்டி
வசிட்ட மாமுனிவர் அசுவயாகம் அமைத்தனரே
கோமதிநதி தீரத்தில் சானகியாரின் பிரதமையுடன்
யாகத்தைக் தொடங்கினார் இராமச்சந்திரப் பிரபுவே.

166. அசுவமேதப் பரியுடன் சத்ருக்கனன் புறப்பட்டார்
விசுவத்தின் மூர்த்தியாம் மாருதியும் துணைபோனார்
ச்யவன மகரிஷியை மாருதி தோள்சுமந்தே
அயோத்தி மாநகருக்கே அழைத்துச் சென்றனர்.

167. அஞ்சனனும் சத்ருக்கனனும் இரேவாநதி யடைந்தனர்
ஆற்றினில் இறங்கியே மறுகரைக்குப் போந்தனர்
மாயமாகி விட்டது அஸ்வமேதக் குதிரையே
சக்திதேவதை தபஸ்வினி அனுமனை வாழ்த்தினர்.

168. ஆஞ்சனேய வீரனே இராமனின் இளவலே
அசுவமேதக் குதிரையே என்னிடம் உள்ளதே
வீரமணி அசுரனால் யாகக்குதிரை மண்டிடுமே
இராமகவசம் சொல்லுகிறேன் குதிரையைப் பெற்றிடுவீர்.

169. என்றிட்ட தபஸ்வியிடம் அஸ்திரங்கள் பெற்றிற்றான்
அசுவமேதக் குதிரையுடன் வீரமணியின் நகர்போந்தார்
மைந்தன் ருக்குமாங்கதன் குதிரையைக் கட்டிட்டான்
தந்தை வீரமணி ருத்ரேசுவரரிடம் பிரார்த்தித்தான்.

170. நீலகண்டன் வீரமணி அரசனை ஆசீர்வதித்தார்
ஸ்ரீராம பிரானின் அவிழ்த்து விட்டிடுவாய்
வீரமணி மறுத்திட்டான் ருத்ரனை வேண்டிட்டார்
அனுமனுடன் சமரிட்டு வெற்றிபெற எத்தனித்தான்.

171. வீரமணியும் ருக்குமாங்கதனும் மயங்கியே வீழ்ந்தனர்
பரமனும் பராசக்தியும் வீரபத்ரனும் வந்தனர்
வீரபத்ரன் சக்தியாய் புஷ்கரனை வீழ்த்தினர்
சத்ருக்னன் வீழ்ந்திட்டார் ஈசனின் கரத்தினாலே.

172. ஆஞ்சனேயர் அறிந்திட்டார் ருத்ரனனின் லீலைதனை
ஈசனைப் பணிந்திட்டார் இராமநாமம் செபித்திட்டார்
அஞ்சனனே அகம்மகிழ்ந்தேன் வரங்களைக் கேட்டிடுவாய்
என்றிட்டார் சிவனாரே அனுமனை வினவிட்டார்.

173. மாருதி மறுபடியும் சஞ்சீவிமலையைக் கொணரவே
ஆயுத்தம் செய்தனரே ஈசனை வேண்டினரே
வாயுவின் புத்திரன் சென்றார் கயிலைக்கே
மலையுடன் வந்துநின்றார் சமர்க்களம் அடைந்திட்டார்.

174. இராமநாமம் சக்தியிலே பெரிதான சக்தியாம்
மறந்திட்டாய் ஆஞ்சனேயா மகாமலையைத் தந்தாயே
என்றிட்ட உடனே அனுமன் உணர்ந்திட்டான்
இராமகானம் பொழிந்தாரே வீரர்கள் பிழைத்தனரே.

175. திருராம பிரான் தரிசனம் கொடுத்திட்டார்
வீரமணி ருக்குமாங்கதன் இருவரும் மகிழ்ந்தனரே
அரியும் அரனும் சேர்ந்து காட்சியருளினர்
அனுமனின் பக்தியை உலகுக்குக் காட்டிடவே.

176. சத்ருக்கனன் கூடஇருந்து அசுவப்பரியைக் காத்தான்
ஆஞ்சனேய மூர்த்தி உடனிருந்து பரியைநடத்திட்டார்
வழிவிட்ட அரசரெல்லாம் அடிபணிந்து நின்றனரே
வழிநிறுத்திய மன்னரெல்லாம் அஞ்சனனிடம் அடிபணிந்தாரே.

177. அசுவமேதக் குதிரை பிரதக்ஷிணத்தை முடித்ததே
அசுவம் அடைந்ததே வால்மீகி ஆசிரமத்தை
குசனாம் இளவல் குதிரையைக் கட்டிட்டான்
திசையெல்லாம் தேடிட்டார் குதிரையைக் காணாமல்.

178. ஆஞ்சனேயர் அதிசயித்தார் சத்ருக்கனன் திகைத்தனரே
குஞ்சமகன் குசனைக் கண்டு வினவிட்டனரே
லவனும் வந்திட்டான் குதிரையைக் கட்டிட்டான்
சத்ருக்கனன் குதிரையை விட்டிடுவீர் என்றானே.

179. லவகுச னிருவரும் நகைத்தே மொழிந்திட்டார்
அக்னி பிரவேசித்த காரிகையை விட்டஅரசனே
ஆருயிர் அரசியை பரிதவிக்க விட்டிட்டார்
இவருக்கே அசுவமேத யாகம் எதற்கென்றார்.

180. பரியை அவிழ்க்கவே மாருதி முயன்றிட்டார்
சத்ருக்னனும் முயன்றிட்டார் பரியை விலக்கவே
லவகுசனின் வாளிகள் இருவரையும் வீழ்த்தினவே
தபோவனம் கொந்தளித்து அமைதி யிழந்ததே.

181. இரதகஜ துரகபதாதிகளுடன் திருராமன் வந்துவிட்டார்
கோதண்ட ராமனாய் சினத்துடன் நின்றிட்டார்
அவர்விட்ட அம்புமழை சிறார்களை அடையவில்லை
சிறார்விட்ட அம்பெல்லாம் இராசனின் சரணத்திலே.

182. விந்தையென நின்றுவிட்டார் எல்லோரும் இதுநோக்கி
இராமபாணம் தாக்குமா ஸ்ரீராமனின் தோன்றல்களை
சிலையென நின்றிட்டான் பேரரசன் தாசரதி
லவகுசரும் நின்றிட்டார் பெருமானின் காந்திதனில்.

183. வால்மீகிமுனி பணித்திருந்தார் சீதைத் திருமகளை
ஒம்பத்தீராறு மலர்களால் சக்தியை வழிபட
ஒம்பத்துநாட்கள் அவள் செய்த பூசையினால்
பிராணபதி வந்திட்டார் லவகுசரை ஆசிக்கவே.

184. முனிவருடன் ஓடிவந்தாள் பூமித் திருமகள்
சமர்க்களத்தில் ஓடிவந்தாள் பதியைக் காணவே
கோதண்டத்தை இராமன் இரதத்தில் நிறுத்திட்டு
சானகியை நோக்கினாள் தனது திருவடியில்.

185. இறும்பூது எய்திட்டான் இரகுகுலத் தோன்றலே
பெரும்பேறு பெற்றிட்டான் அன்னையைக் காணவே
லவகுசரை ஆலிங்கனம் செய்து மகிழ்ந்திட்டார்
மாருதியுடன் சத்ருக்கனனை எழுப்பி ஆசித்தார்.

186. அயோத்தி ஏகிட்டார் அசுவக் குதிரையுடன்
பூமித்திருமகள் தன்னுருப் பதுமையை நோக்கினாள்
துணைவி மக்களுடன் யாகம் நிறைவானதே
ஊர்மக்கள் உவகையுடன் மனைக் கேகினாரே.

187. அஞ்சனை மைந்தன் தன்மனம் நிரம்பினார்
கொஞ்சும் உவகையுடன் பணிந்து நின்றிட்டார்
என்இறைவா என்கடமை முடிந்ததே என்றிட்டார்
கார்மேக வண்ணன் உணர்ந்தான் அவன்மனத்தை.

188. சானகித்தாய் அருளுடனும் எனது ஆசியுடனும்
சேதுக்கரை அடைவாய்நீ இராமநாமம் செபிப்பாயே
மாதுநங்கை அன்னையுடன் எப்போதும் உன்மனதில்
கொலுவுற்றிருப்பேன் மாருதியே வாழ்க என்றார்.

189. அரனார் எடுத்திருந்த மாருதிக் கோலம்முடிந்ததே
அரிமாலவர் தனது இராமவதாரத்தை முடித்துக்கொண்டு
பூமகளாம் சீதையுடன் பாற்கடற் கேகினாரே
வைகுண்டமே மிதந்ததே பக்திப் பரவசத்தால்.

190. இராமராம ராமராம என்றிட்டான் சுந்தரன்
சீதாராம சீதாராம என்றுநின்றான் அன்பனே
இரகுராம ரகுராம என்றுமனம் நிறம்பிட்டான்
என்தலைவன் மாருதி அஞ்சனைமைந்தன் மாருதி.

191. இராமயணக் காவியத்தின் சூடாமணித் தலைவனே
சுந்தரக் காண்டத்தின் சுந்தரத் தலைமகனே
சரணாகதி யெனும் பண்புக்கு அரசனே
உனக்குத் தொண்டனாக எனக்கு அருள்வாயே.

192. பாரிஜாத விருக்ஷத்தில் மாருதியே தவம்செய்வாய்
சிறிய திருவடியாய் பண்பில் உயர்தெய்வமே
ஆத்மபலம் மனோபலம் புத்திர்பலம் எல்லாமாய்
பிராணபலம் தேகபலம் சம்பத்தைத் தருவாய்நீ.

193. கூப்பிய கரத்துடன் பக்த ஆஞுசனேயனாய்
படைக்கலங்கள் நிறைந்திட்ட சதுர்புஜக் கடவுளாய்
பஞ்சமுக ஆஞ்சனேயனாயப் பாரோர் போற்றிடவே
யோக ஆஞ்சனேயராய் சோளிங்கரில் நின்றிட்டாய்.

194. மேல்கோட்டை யில்யோக நரசிம்மரைக் கண்டுவிட்டு
சோளிங்கர் மலையில்அதே நரசிம்மரைக் கண்டுவிட்டு
நாமக்கல் மலைமுகட்டில் லக்ஷ்மிநரசிம்மரைக் கண்டுவிட்டு
உன்னையே தரிசித்தேன் ஆஞ்சனேய மூர்த்தியே.

195. உன் பாதங்களைநான் சுசீந்திரத்தில் கண்டேன்
உன் வச்சிரமேனியை நங்கைநல்லூரில் கண்டேன்
உன் வீரமேனியை சஞ்சீவியாய்ப் பெங்களூரில் கண்டேன்
உன் அன்புத்திருக்கோலத்தை பனசவாடியில் கண்டேன்.

196. எப்போதும் உன்வதனம் திருராமனையே நோக்கும்
தப்பாமல் உனதுகரம் திருராமனுக்கே கூப்பும்
தளிர்மனதால் எனக்காக நல்வாழ்வை அருள்வாய்
சரணாகதனுக்கு சரணாகதி அடைந்தனனே நானே.

197. இராமனையே நீயேதிருக் கிருஷ்ணனிடம் கண்டாய்
கிருஷ்ணனின் ஆணையினால் பார்த்தனுக்குக் கொடியானாய்
இராமயணக் காப்பியத்தின் ஆணிவேராய் நின்றாய்
உனதுதிருவடி பற்றிடும்என் மனையினைக் காப்பாய்.

198. தண்டனிட்டு நின்றுன்னை யாசிக்கிறேன் அய்யா
கண்டுற்றேன் உவகையுற்றேன் உன்நாமம் கேட்டேன்
மண்டியிட்டு உன்னருளை வேண்டிநின்றேன் நானே
பரிபூரண நிலைதருவாயா மாருதித் தெய்வமே.

199. அஞ்சனையும் கேசரியும் எப்பேறு பெற்றனர்
கொஞ்சிட்ட தங்கள்மைந்தன் காப்பியம் படைக்கவே
அந்தணனாய் முதன்முதலாய் திருராமன் பார்த்த
என்குரு அனுமந்தன் எல்லாமும் கொடுப்பான்.

200. பார்வேண்டும் புவிவேண்டும் பதவியென அலையும்
மாந்தர்கள் அரசகுல திலகர்கள் மத்தியில்
சரணம் சரணம் சரணமே போதுமென்ற
மாருதியே நீயேயெனக்கு முதற்கட வுளானாயே.

201. போர்க்களத்தில் நீதந்தாய் எப்போதும் வெற்றி
வெற்றிலையில் மாலைசெய்து பூசிப்பேன் உன்னை
வெற்றியினை அனுதினமும் எனக்களிப்பாய் நீயே
வெற்றிபெற வில்லையெனில் மனஅமைதியானும் தருவாயே.

202. பார்போற்ற நீவாழ்ந்தாய் திரேதா யுகத்தினிலே
சீர்போற்றி நான்தொழுவேன் கலி யுகத்தினிலே
கண்கண்ட தெய்வமாய் என்குலத்தைக் காத்திடவே
மண்டியிட்டு நான்பணிவேன் காருண்யக் கடவுளே.

அனுமனின் நாற்பதை என்மொழியில் எழுதச்செய்து, என்நாவில் நின்று நீ திருராமன் சரிதத்தை எழுதிவிட்டாய். அனுதினமும் உன்னை நினைத்து நான் இறும்பூது எய்துகிறேன். என்மனதில் உன்னைநான் எப்போதும் பூசிக்கிறேன். மந்தனவன் என்னிடம் அவனருளால் கடமை செய்கையில், கூடவே என்னுடன் இதுவரை நீ அருள் செய்தாய். உன்னையே நான் என்னுடன் எப்போதும் உணர்கிறேன். இப்பாமாலையை ஏற்றுக் கொண்டு அருள்செய்வாய்.

ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெய ராம்
ஸ்ரீராம் ஜெயராம் ஜெயஜெய ராம்.

பரிதிமதி

## <u>ஆசிரியர் பற்றி குறிப்புகள்</u>

ஆசிரியர். திரு. இரவிச்சந்திரன் (பரிதிமதி) மருத்துவ இயற்பியல் பேராசிரியர். தமிழ்ப்பற்றினாலும் மனதில் உள்ள இறைவனிடம் நம்பிக்கையாலும் பாடல்கள் புனைவதில் ஆர்வம் உள்ளவர். அவர் தமிழ்மண்ணில் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தவர். பெங்களூர் கித்வாய் புற்றுநோய் மருத்துவக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்து, பிறகு ஓமான் நாட்டில் பேரரசர் மருத்துவக் கழகத்தில் இப்பொழுது பணியாற்றி வருகிறார்.

சிறந்த தமிழ்மொழியில் அவரை வேண்டி பாடல்களைப் பாடியிருக்கிறார். அஞ்சனை மைந்தன் எழுந்தருளிய இடங்களான நாமக்கல், தாராபுரம், சுசீந்திரம், நங்கநல்லூர், பெங்களூர், பனசவாடி, போய்வந்த நற்பேருள் படித்தவர் எல்லோருக்கும் கிடைப்பதற்காக எழுதப்பட்ட இந்நூலை அவர் வெளியிடுவதில் மிகவும் மனமகிழ்ச்சி அடைகிறார். சனீஸ்வரர் 4, 8 ஆகிய இடங்களில் கோள்சாரத்தில் வரும்போது இந்தப்பாடல்களைப்படித்து அஞ்சனை மைந்தன் அருள்பெற்று நல்ல நலன்களை அடைவார்கள் என்ற கருத்துடன் இந்த நூல்மாலையை பதிப்பில் தந்திருக்கிறார். பேராசிரியர். முனைவர். இரவிச்சந்திரன் பெரியாண்டவர் பாமாலை, திருமுருகன் பாமாலை, கற்பக விநாயகர் மணிமாலை, அரங்கனின் திருவருள், அண்டத்தின் பேரருள் அரனாரின் திருவருள் என்ற மற்ற பக்திநூற்களையும் எழுதியிருக்கிறார்.

ஆஞ்சநேயர் எல்லாவித நன்மைகளையும் தனது தொண்டர்களுக்கு அருள்வதில் சிறந்தவர். இராமனின் சரணத்தை அடைந்தவர்களுக்கு மேலும் மேலும் நலன்களை அளிப்பார். எல்லாம் வல்ல மாருதி ஆசியளிப்பார், என வேண்டிக்கொள்ளும் அன்புமகன்.

பரிதிமதி